RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s754

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணனின் விருது பெற்ற நாவல்களில் சமுதச் சிந்தனைகள்

**இரா. நாகராணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி, சென்னை-600017, தமிழ்நாடு, இந்தியா.

# The Theme of Social Consciousness in Rajam Krishnan's Award-Winning Novels

**R. Nagarani** [a, *]

[a] Department of Tamil, Shri Shankarlal Sundarbai Shasun Jain College for Women, Chennai-600017, Tamil Nadu, India

* Corresponding Author: nagarani@shasuncollege.edu.in

Received: 13-12-2021
Revised: 29-04-2022
Accepted: 09-05-2022
Published: 30-07-2022

**ABSTRACT**

Fiction is not created just to entertain. It serves as a historical treasure trove of social change, the context, and condition of a changing society by uncovering social problems and suggesting solutions. Fiction creators act as the lifeblood of this forum. Such a creator is Rajam Krishnan. With the aim of social development, he has created many new personalities in his fiction from various angles. He has given life and meaning to the nucleus of innovation with the aim of improving the individual's character and interests and has sown the seeds of social excellence in the form of the contribution of storytellers. If the standard of living of the people is to be raised, the level of education should be raised. Education should be communal. We need to get rid of the condition of being dependent on others economically. Educated young people need to listen to experienced elders. Capitalist norms should be broken and rights should be voiced. Students of higher education should be aware of these principles and be aware of social progress. Eliminating the distinctions between upper and lower caste people, Rajam Krishnan's Katha Manders has been created so that the idea of living with the idea of humanity should be removed and vandalism should be eliminated. Educated women and illiterate women should have clarity of thought. They should become powerful in the liberation struggles and in opposing the groups that work against women. When sexual harassment and violence occur in the workplace, workers should be courageous and have a strong mindset to get rid of them. In order to raise the economic status, the standard of education should be raised. Rajam Krishnan's award-winning novelizations capture the idea that women's thinking should be beneficial to the nation and the home.

**Keywords:** Rajam Krishnan, Women's Thought, Liberation, Harassment

## முன்னுரை

களஆய்வு முறையில் ஒரு எழுத்தாளன் ஒரு குறிப்பிட்ட தளத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அங்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு நிகழ்த்தியோ அக்களத்திலுள்ள மக்களுடன் சிறிது காலம் வாழ்ந்தோ சமூகச் செய்திகளைச் சேகரிக்கிறான். தான் தேர்ந்தெடுத்த மக்களின் வாழ்வியலை உற்று நோக்குபவனாகவும் வாய்ப்பு நேரிடும்போதெல்லாம் அதில் பங்கேற்பவனாகவும் அவன் மாறுகின்றான். அந்த வகையில் கள ஆய்வு முறையில் புதினம் எழுதியவர்களுள் முக்கியமானவர் இராஜம் கிருஷ்ணன். இவரது படைப்புகள் பெரும்பாலும் மக்களின் வாழ்வியல் ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டமைகின்றன. இராஜம் கிருஷ்ணன் தான் கண்ட கேள்வியுற்ற செய்திகளைச் சேகரிப்பதற்காக

நேரடியாக அந்த இடத்திற்கே சென்று தகவல்களைத் திரட்டி, தனது நுண்மான் நுழைபுலத்தால் படைப்பாக்கம் செய்வார். அந்தந்த இடங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறை மற்றும் பண்பாட்டு விழுமியங்களைச் சிறப்பான முறையில் உற்று நோக்கித் தனது படைப்பில் எடுத்துக்காட்டுவார். இவரது விருது பெற்ற நாவல்களில் வெளிப்படும் சமுதாயச் சிந்தனைகளை ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## இராஜம் கிருஷ்ணனின் நாவல்களில் சமுதாயச் சிந்தனைகள்

இராஜம் கிருஷ்ணன் மானுடத்தின் மீதும் சமுதாயத்தின் மீதும் கொண்ட பற்றின் காரணமாகத் தமது அனுபவ அறிவினாலும் புதிய புதிய சிந்தனைகளினாலும் ஒவ்வொரு புதினத்திலும் வெவ்வேறு வகையான மனிதர்களைப் படைத்திருக்கின்றார். தொழிலாளர், தாழ்த்தப்பட்ட மக்கள், வீரர்கள் என்று பல்வேறு வகையான சமுதாயக் களங்களையும் அவற்றில் நிகழும் வாழ்வியல் மாற்றங்களையும் பின்னணியாகக் கொண்டு புதினங்களைப் படைத்துள்ளார்.

பொதுநல நோக்குடன் அவர் கூறியிருக்கின்ற சமுதாயச் சிந்தனைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ❖ சாதி சமய வேறுபாடு
- ❖ உழைக்கும் வர்க்கத்தின் மேம்பாடு (தொழிலாளர் நலன்)
- ❖ புரட்சிச் சிந்தனை
- ❖ பெண் சிந்தனை
- ❖ கல்வி பற்றிய சிந்தனை
- ❖ பொருளாதாரச் சிந்தனை

## சாதி சமய வேறுபாடு

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கு மறுதலையாக இன்றைய சூழலில் சாதிப்பிரிவு தலைவிரித்தாடுகிறது. தீண்டாமை ஒரு பாவச் செயல்; தாழ்த்தப்பட்ட பிரிவினர் இறைவனின் பிள்ளைகள் என்றெல்லாம் சான்றோர்கள் குரல் கொடுத்தனர். ஆயினும் சாதிவெறி தீர்ந்தபாடில்லை. “இந்தியாவின் சமுதாய அமைப்பு சாதியமைப்புக்கு இலக்கியமாகவும் இலக்கணமாகவும் அமைந்துள்ளது.” எனவே இவ்வமைப்பில் காணப்படும் தாழ்த்தப்பட்ட பிரிவினர் என்னும் சமுதாயக் குழுவின் சிக்கல் வேறெந்த நாட்டிலும் காண இயலாத ஒன்றாகும் (Rajam Krishnan, 1978). இதனை ஒழிக்க விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், ஊடகங்கள் ஆகியவற்றின் மூலமாக மிகுதியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புனைகதை ஆசிரியர்களும் தம் எழுத்துகளின் மூலமாக இச்சிக்கலைப் பதிவு செய்தனர். அவ்வகையில், இராஜம் கிருஷ்ணன் தமது புதினங்களின் மூலமாகத் தீண்டாமை குறித்த கருத்துகளை முன் வைத்தார். ‘வேருக்கு நீர்’ என்ற புதினத்தின் மூலமாகத் ‘தீண்டாமை’ என்ற சொல்லை வேரறுக்க முன் வந்தார்.

“எங்களை இப்போது ஓட்டலில் ஏற்றுகின்றார்கள். குடிக்க நீர் கொடுக்கின்றார்கள். சமுதாயத்தில் மதிப்பாக வாழ முடியும். ஆனால், வாழ்க்கை என்று ஒரு தனி மனிதனின் தேவையோடு ஆராய்ந்தால் எங்கள் நிலை என்ன? என் போன்றவர்கட்குக் குப்பைச் சகதியில் வேர். அதைவிட்டுப் பெயர்ந்து விட்டோம். மேல்படிகளில் நாங்கள் ஊன்ற யார் இடம் கொடுக்கின்றார்கள்” என்ற கேள்வியைத் துரை என்ற கதைமாந்தரின் வாயிலாகக் கேட்பதோடு தாழ்த்தப்பட்டவர்கள் தங்களுடைய சொந்த சமுதாயப் பின்னணியிலிருந்து விடுபட்டபின் ஏற்பட்ட மாற்றத்தையும் சுட்டிக்காட்டுகிறார் (Rajam Krishnan, 1993).

- ❖ குடி
- ❖ உயர்ந்த உணவு வகைகள்
- ❖ நாகரிக வாழ்க்கை

எனத் தங்கள் வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொண்டு எளிய வாழ்வு, கூழ் குடித்தல் போன்ற எளிமையானவற்றை வெறுக்கின்றனர். “மனுஷன் வாய்க்கு ருசியா சாப்பிடக் கூடாது, எண்ணிக்கோ கூழ் குடிச்சான் என்பதற்காக இன்னும் அதையே செய்ய வேண்டுமா” என்று கூறுவதிலிருந்து செயற்கை வாழ்வாகிய வீட்டை அலங்கரிக்கும் அலங்காரப் பொருள்களும், நாகரிக உடைகளும், ஆடம்பர வாழ்வும் அவர்கள் வாழ்வியல் பாதையையே மாற்றி விட்டன என்றே சொல்லலாம் (Rajam Krishnan, 1993).

உயர்வகுப்பைச் சேர்ந்த ‘யமுனா’ என்ற பெண்ணைக் காந்தீய நெறியில் வாழும் அவளது பெற்றோர் ‘துரை’ என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவனுக்குத் திருமணம் செய்து வைப்பதன் மூலம் கலப்புமணத்தின் அவசியத்தையும் காலமாற்றத்திற்கேற்ப நாமும் நம்முடைய சமுதாய வாழ்வியல் மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை அறிவுறுத்துகின்றார்.

## உழைக்கும் வர்க்கத்தின் மேம்பாடு (தொழிலாளர் நலன்)

கூலித் தொழிலாளர்களின் வரலாற்றையும், உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வியலையும் ‘கரிப்பு மணிகள்’ என்னும் புதினம் எடுத்தியம்புகிறது. வெறும் பொம்மைகளாக இருந்த பெண்கள், பெண் தொழிலாளிகள் விழிப்புணர்வு பெற்றுப் பொங்கி எழுந்தனர். உப்புப் போன்று கரிப்பாகவே உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வும் இருக்கின்றது. பொருளாதாரச் சூழலில் பலியான தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் உரிமையின் குரல் இப்புதினத்தில் ஒலிக்கின்றது.

உப்பளத் தொழிலாளிகள், பதிவுக்கூலி, ஓய்வு நாள் கூலி, மழைக்காலங்களில் பாதி நாள் ஊதியம், முதுமைக்கால ஓய்வு ஊதியம், மருத்துவ வசதி, பெண்களுக்குச் சம கூலி, பிரசவகால உதவித்தொகை, பிள்ளைகளைக் காக்கப் பால்வாடிகள், உணவு, நீர், வீடு ஆகிய அடிப்படைத் தேவைகளை முன் வைத்துப் போராடுகின்றனர். “உழைப்பின் பொருளை விற்ற காலம் மறைந்து, உழைப்பையே விற்றாலும் அதற்கு ஈடான வருவாய் இல்லாமல் போகும் நிலையில், உழைப்புக்கேற்ற ஊதியம் வேண்டிப் போராடுகின்றனர்” (Rajam Krishnan, 2005).

‘ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என்று சொல்லுகின்ற போது பெண்களும் போராட்டத்தில் பங்கு கொண்டு போராட வேண்டும். “கணக்கப்பிள்ளை, கங்காணின்னிருக்கிறவ ஆருதா பொம்பிளய கவுரவமா நடத்துறா? இவனுவ வாயில செறுக்கியுள்ளன்னுதா வரும். அம்மன் கொடையின்னுறா, ஆதிபராசக்திகின்றா. வயித்துக் கொடுமை பொஞ்சாதி, புருஷனும் வேல செஞ்சாக் கூட அவன் கண்ணுமுன்ன அவனுவ நாக்கில நரம்பில்லாம பேசுதா. எனக்கு ஏன் வேலை போச்சி? இந்த அக்கிரமத்தைக் கேட்டேன் சீட்டைக் கிழிச்சிட்டாங்க” என்னும் இராமசாமியின் கூற்று, பெண்மையைச் சிறுமைப்படுத்தி அடிமைப்படுத்தும் போக்கை ஒழித்து ஆணைப்போல பெண் சமநிலை பெற வேண்டும் என்ற கருத்தை முன் வைக்கிறார் (Rajam Krishnan, 2005).

சேற்றில் மனிதர்கள் என்ற புதினத்தில் உழவர் வாழ்வின் உழைப்பும், அவர்களின் நிலையும் எடுத்துக் காட்டப்படுகிறது. சாதீய வர்க்கப் பாகுபாட்டின் மூலம் மேல்வர்க்கம், அடித்தள வர்க்கத்தை அமுக்கி அடக்குவதும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இப்புதினத்தில் “நிம்மதியாகப் படுக்க, உட்கார்ந்து பசியாற அடிநிலம் சொந்தமில்லை” என்று தனிமனித உரிமைகள் நிலைநாட்டப்படவில்லை. அனைவரும் உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்று தேவு கூறுகின்றான். கல்வி அறிவற்ற வடிவு போன்றோர் தேவுடன் இணைந்து போராடுகின்றனர். உணவு, குடிநீர், சுகாதாரம் போன்ற வாழ்வாதாரத்திற்குரிய அடிப்படை உரிமைகள் தேவை என்பதை வலியுறுத்துகின்றனர். அதிகார வர்க்கத்தால் கொலை செய்யப்பட்ட குஞ்சிதம் என்ற பெண்ணிற்கு நீதி கேட்டு காவல் நிலையம் முன்பு போராடுகின்றனர்.

உழைப்பின் பயனை ஆணும் பெண்ணும் சமமாகப் பெற வேண்டும் என்ற கருத்தை இராமசாமி, தேவு மற்றும் வடிவு கதைமாந்தர்களின் வாயிலாகப் பேச வைத்துள்ளார். சமுதாயத்தில் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்ற சீரிய சிந்தனையையும் இராஜம்கிருஷ்ணன் முன் வைக்கிறார்.

"உழைக்கும் தோழர்களே ஒன்று கூடுங்கள்

உலகம் நமதென்று சிந்து பாடுங்கள்"

என்ற வாலியின் வார்த்தைகளுக்கு ஏற்ப உழைப்பின் மேன்மையை அழகாகச் சொல்லுகின்றார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் என்ற விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதாக இப்புதினம் விளங்குகிறது.

## பெண் சிந்தனை

பெண் என்பவள் குடும்பம் சார்ந்து இருப்பதுடன் தனது சுய மரியாதைப் பண்பினை இழக்காமல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும் என்ற கொள்கை ஆணுக்கு மட்டுமல்ல பெண்ணுக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது என்ற நியதியைப் புரிந்து கொள்ளுதலும் சமுதாய வளர்ச்சிக்கு நன்மையைத் தரும். "கட்டிக்கிட்ட பொம்பிளய, வூடு கூட்டுற துடப்பக் கட்டன்னு நினைக்காம, அதுக்கு ஒரு அந்தசுக் கொடு" என்று வயதான கிழவர் கூறுவதாகச் சேற்றில் மனிதர்கள் புதினத்தில் இராஜம் கிருஷ்ணன் குறிப்பிடுகின்றார் (Rajam Krishnan, 2001; Rajam Krishnan 1981).

இப்புதினத்தில் இடம் பெறும் காந்திமதி, படிப்பு ஆசை காட்டி ஏமாற்றி, பாலியல் கொடுமைக்கு ஆளாக்கியவனை ஏற்றுக் கொள்ளாமல் பெண் வன்கொடுமைக்கு எதிராகப் போராடத் துணிகிறாள். அந்த வாழ்வின் முறைகளோடு ஒத்துப் போகாது எதிர்த்து நிற்கிறாள்.

சுழலில் மிதக்கும் தீபங்களில் வரும் கிரிஜா என்ற தலைமை மாந்தர் முதுகலை படித்த பட்டதாரிப் பெண். திருமணத்திற்குப் பின் மாமியார், கணவன், குழந்தைகள் என்ற குடும்ப அமைப்போடு வாழ்க்கையைக் கழிக்கின்றாள். கணவன், மனைவி இருவருக்கும் நடந்த பிரச்சினையில் மன நிம்மதிக்காக ஹரித்துவார் சென்று நான்கு நாட்கள் கழித்து வீட்டுக்கு வருகின்றாள். அவளை மாமியாரும் கணவனும் தவறானவள் என்று சொல்லி வீட்டை விட்டு வெளியேற்றுகின்றனர். இரத்னா என்ற படித்த பெண்ணின் துணையுடன் தன் இரு பெண்பிள்ளைகளுக்குத் துணையாக நிற்க வேண்டும் என்பதற்காக நீதிமன்றம் செல்ல முற்படுகின்றாள்.

"அன்புடை கணவன் அழிதகச் செயினும்

பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை"

என்ற நிலை மாற்றப்பட வேண்டும் என்ற நோக்கில் இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது (Rajam Krishnan, 1993).

1953-ஆம் ஆண்டு நடைபெற்ற புதினப் போட்டியில் பரிசு பெற்ற 'பெண் குரல்' என்ற நாவல் கலைமகளில் தொடராக வந்தது. இதன் கதாநாயகி சுசீலா இன்றும் ரசிகர்கள் மனதில் அழியாத பாத்திரமாக உள்ளார். ஒரு கூட்டுக் குடும்பத்தின் சம்பிரதாயக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபடத் துடிக்கும் சுசீலாவின் மன உணர்வுகளை ராஜம்கிருஷ்ணன் மிக நுட்பமாக இப்புதினத்தில் சித்திரித்துள்ளார். "கதையில் நிகழ்ச்சிகளும் மனத் தத்துவமும் இழைந்து செல்கின்றன. பாத்திரங்கள் பூரண உருவம் பெற்று நடமாடு கிறார்கள். சிறிய சிறிய இழைகளெல்லாம் சேர்த்து பெரிய கயிறாக மாறி, சோர்ந்து போன பெண் உள்ளத்தைப் பிணைத்து வீழ்த்துவதைப் பார்க்கிறோம். கதை மேலும், மேலும் விறு விறுப்பாக நடக்கிறது. இதில் உள்ள நடை இயற்கையாக இருக்கிறது... அங்கங்கே வரும் உபமானங்கள் அனுபவகாரமாக இருக்கின்றன" என்று கி.வா. ஜகன்நாதன் கூறுகிறார். கூட்டுக் குடும்ப வாழ்வில் ஒரு பெண் அனுபவிக்கும் மன அழுத்தத்தைப் பதிவு செய்தது (Rajam Krishnan, 1963).

## புரட்சிச் சிந்தனை

கோவா விடுதலைப் போரில் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் போராடி உள்ளனர். கோவா மாநிலத்தின் கற்பின் சின்னமாக வளையல் கருதப்பட்டது. வீட்டிற்குள் வளைய வந்த ஆயிரமாயிரம் பெண்கள் தம் கரங்களில் புரட்சிக்கான கருவியேந்தி போராட்டங்களில் ஈடுபட்டனர். பெண்களும்

இளைஞர்களும் கோமந்தகப் பூமியைப் போர்த்துக்கீசிய ஆதிக்கத்திடமிருந்து விடுவிக்கப் போராடினர். தியாகத் தீயில் குளித்தெழுந்த வீரமும் சோகமும் அன்பும் நிறைந்த உணர்ச்சிமிக்க வரலாற்றை விளக்குகின்ற இப்புதினம் தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஆசிரியர் புரிந்துள்ள சிறந்த பணி என்று முன்னாள் கோவா சட்டமன்றத் தலைவர் கோபால் அப்பா காம்த் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

கோவாவில் சில காலம் தங்கியிருந்த போது அச்சிறிய நிலப்பரப்பில் நீண்ட காலம் நடைபெற்ற விடுதலைப் போராட்டமும் ஒத்துழையாமையின் அடிப்படையில் அமைந்த அஹிம்சையால் பயன் கிட்டாத நிலையையும் தனது நுண்மான் நுழைபுலத்தால் வளைக்கரம் புதினத்தைப் படைத்துள்ளார். கோவாவின் அழகு, அம்மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், அருமை பெருமைகள், அன்பும் பண்பும் பெருந்தன்மையும் நிறைந்த மாந்தர்கள், சூழல்கள், படித்தோர்களை மதிக்கும் பண்பு, வாழ்க்கைப் போராட்டங்கள் ஆகியவற்றை நுட்பமாக ஆராய்ந்து அறிந்து இப்புதினத்தைப் படைத்துள்ளார்.

## கல்வி பற்றிய சிந்தனை

'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்பது வள்ளுவர் வாக்கு. கல்வி என்பது ஒருவர்க்குக் கண் போன்றது. அறியாமை இருளினைப் போக்கி, ஞான ஒளியைக் காண, மௌனத்தின் பெருமையையும் நகைப்பையும் உணர்ந்து கொள்வதற்குக் கல்வி அறிவே சிறந்த அறிவாக விளங்குகிறது. இத்தகைய கல்வி அறிவினைப் பெறும் உரிமை அனைவருக்கும் பொதுவானது என்பதை, "யாவர்க்கும் கல்வி பெற உரிமை உண்டு. ஆரம்ப நிலையிலாவது கல்வி இலவசமாக வேண்டும். ஆரம்பக் கல்வி கட்டாயமானதாக வேண்டும். தொழிற்கல்வி, உயர்கல்வி வாய்ப்புகள் சமமாக அனைவராலும் எட்டப்படுவதாக அமைய வேண்டும்." என்று உலக மனித உரிமைகள் அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது. உலகில் மனிதனின் தரத்தை உயர்த்துவது கல்வியே; பெற்றெடுத்த பிள்ளைகளுள் கல்விக் கற்றவனையே தாய் முதன்மைப்புடுத்துவாள் என்பதைச் சங்க இலக்கியம் செப்புகின்றது. கல்வியானது குடும்ப உறவுகளைப் பலப்படுத்தி சமுதாய உறவில் பங்கு பெற வைக்கிறது. மனிதனின் தனித்துவத்தையும் ஒழுக்கங்களையும் ஆளுமைத் திறனையும் பண்பையும் வளர்க்கச் செய்கிறது (Raja Muthrulandi, 2021). சமூதாயக் கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் இளைய சமுதாயத்தினரை இணைக்கும் மேம்பாலமாகக் கல்வி விளங்குகிறது (Rajam Krishnan, 1968).

கி.பி.1966 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட கேத்தாரிக் கல்விக்குழுவின் அறிக்கையில், "கல்வியானது நாட்டின் சமுதாய, பொருளாதார, பண்பாட்டுக் கூறுகளில் தேவையான மாற்றங்களைத் தோற்றுவித்து நாட்டின் இலட்சியங்களை எய்த உதவக்கூடிய ஒரு வலுமிக்கக் கருவியாக விளங்க வேண்டும் என்று கருத்து வெளியிட்டது" (Santhanam, 1994).

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற நோக்கில் இலவசக் கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டது. கல்வி ஒருவனுக்குக் கண் போன்றது. கல்வி கற்பது என்பது மனிதனுடைய பிறப்புரிமையாகும். ஆகவே அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்திய அரசு 'அனைவருக்கும் கல்வி' என்ற குறிக்கோளை வகுத்து ஆறு வயது முதல் பதினாறு வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி அறிவு தந்தே தீர வேண்டும் என்ற கொள்கையை இந்திய தேசிய கல்விக் கொள்கை வரையறுத்தது. கல்வி தனி மனித வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் துணைபுரிவதாக இருக்க வேண்டும். குழந்தைகளின் தனித்திறனையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டினையும் இந்திய தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்தியுள்ளது. தரமான கல்வி தரமான சேவையின் மூலம் குழந்தைகளுக்கும் நாட்டிற்கும் நலம் தருவதாகவும் பயனுடையதாகவும் கல்வி இருக்க வேண்டும்.

கல்விச் சலுகைகள் இருந்த போதிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு அச்சலுகைகள் தெரியாது இருப்பது விந்தையாக இருக்கிறது. ஒரு சில தொழிலாளர்கள் முயற்சி செய்து கல்வியைப் பெற்றிருக்கின்றனர். கரிப்பு மணியில் தொழிற்சங்கத் தலைவனாக இருக்கும் இராமசாமி தொடக்கக் கல்வி முடித்து ஆறாவது படிக்கிறான். ஆறாவது படித்து முடித்தவுடன் தந்தை இறந்தவுடன் படிப்பைத் தொடரவில்லை. மருதாம்பாளின் ஒரு மகன் மட்டும் பள்ளியில் படித்தான். தொழிலாளர்கள் குடும்ப

வறுமையைக்காட்டி குழந்தைகளுக்குக் கல்விக்கூடம் அனுப்ப மனமில்லாமல் இருக்கின்றனர். இலவசக்கல்வி, சத்துணவுத்திட்டம் இருந்தும் பள்ளிக்கு அனுப்பாமல் இருக்கின்றனர்.

“அரசு பாலர் பள்ளி வச்சிருக்கா, உணவுத் திட்டம் இருக்கு. எத்தினி பேரு தொடச்சியா பள்ளிக்கு அனுப்புறானுவ? கணக்கெடுத்துப்பாரு? மதகடில நண்டு பிடிச்சிட்டும், தெருப் பொறுக்கிட்டும் திரியுதுங்க. கேட்டா அதில்ல, இதில்ல, எப்பிடிப் பள்ளிக்கொடத்துக்கு அனுப்புறதுன்னு பேசுறானுவ?” என்று கல்வி குழந்தைகளுக்கு மறுக்கப்படுவதை நினைத்து இராஜம் கிருஷ்ணன் வேதனையுறுகின்றார் (Rajam Krishnan, 2001). கரிப்பு மணிகளில் அருணாசலத்தின் மகன் குமரன்; பள்ளிக்குச் செல்லாமல் வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கிறான். அன்றாடம் ஐந்து பைசா வைத்தாலே பள்ளிக்கூடம் போவேன் என்று அடம்பிடிக்கிறான். அன்றாடம் காசு கொடுத்து பள்ளிக்கு அனுப்ப வசதியில்லை. அவன் தாயும் அதை கண்டு கொள்வதில்லை. தொழிலாளர் பிள்ளைகள் படிக்க வேண்டுமென்றால் வசதியும் இல்லை. படிக்க வசதி இருந்தால் நாமும் முன்னேறி இருக்கலாம் என்று இராமசாமி வருத்தப்படுகின்றார்.

## பெண் கல்வி

சேற்றில் மனிதர்கள் புதினத்தில் முதன்மை மாந்தராக விளங்கும் சம்முகத்தின் இரண்டாவது மகள் அம்சு விவசாய வேலைக்காகப் பள்ளிப் படிப்பை ஆறாம் வகுப்புடன் முடித்துக் கொள்கிறாள். மாதர் சங்கத் தலைவியான கிட்டம்மாள் எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கின்றாள். சம்முகத்தின் மூத்த மகள் காந்திமதி பள்ளிப்படிப்பை முடித்த பிறகு தொழிற்கல்வி பயில விரும்புகின்றாள். சம்முகம் தன் மகன் கோபாலைப் படிக்க வைப்பதற்காகவும் வறுமையினாலும் காந்திமதியின் படிப்பு மூன்றாண்டுகள் தடைபடுகிறது. மூன்றாண்டுகளுக்குப் பிறகு தொழிற்கல்வியில் சேர இரண்டாயிரம் ரூபாய் கேட்கின்றனர். அதை கொடுக்க முடியாததால் காந்திமதியின் தொழிற்கல்வி ஆசை தடைபடுகிறது. தொழிற்கல்விக்கு மாறாகத் தட்டச்சு, சுருக்கெழுத்து பயின்று வேலைக்குப் போகலாம் என்று ஆலோசனை வழங்குகின்றார். காந்திமதியின் தாய் லட்சுமி உயர்கல்வி படிக்கும் ஆசைக்குத் தடைபோடுகின்றாள். பெண்களுக்கு உரிய வயதில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற கருத்தினை முன்மொழிகின்றாள். காந்திமதியின் உயர்கல்வி முயற்சியை நாயக்கர் வீட்டம்மாள் பழித்துப் பேசுகின்றாள்.

“என்னாடி காலேஜி, இனியும்? அதாம் பத்து பதினொண்ணுன்னு படிச்சாச்சே? பொட்டப் புள்ளங்களக் காலத்துல கட்டிக்குடுக்காம என்னாடி படிப்பு? உங்கப்பனுக்கே தன் நிலை தெரியாமப்பூடும் சில சமயம்” (Rajam Krishnan, 2005).

## சம்முகத்தின் தந்தை ராமசாமி

“பொன்னு, நீ கட்டிக்கிட்டுப் பொஞ்சாதியப் படிக்க வச்சுக்க; மேச்சாதில்லாம் அப்படித்தான் செய்யிறா. கட்டிக்கிட்ட பொம்பளய வூடு கூட்டற துடப்பக் கட்டன்னு நினைக்காம, அதுக்கு ஒரு அந்தசுக் குடு” என்று பொன்னடியானிடம் கேட்கிறார் (Rajam Krishnan, 2001). காந்திமதி மேற்படிப்பு படிக்க எண்ணி சாலி என்பவனின் ஆசை வார்த்தையில் மயங்கித் தவறான வழிக்குப் பலியாகின்றாள். பெண்களுடைய உயர்கல்வியின் உரிமை ஏழ்மை, ஆண்கல்வியின் முதன்மை, பெண்களே எதிர்ப்புணர்வைக் காட்டுதல் போன்ற காரணங்களால் பெண்கள் படிக்க இயலாத நிலை உருவாகி இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார் (Rajam Krishnan, 2006).

## பொருளாதாரச் சிந்தனை

ஒரு நாடும் வீடும் முன்னேற வேண்டுமெனில் பொருளாதாரம் மேன்மை அடைய வேண்டும். ஒரு நாட்டின் அரசு, குடிமக்கள் உழைத்து வாழ்வதற்கான வழிமுறைகளை உருவாக்கித் தர வேண்டும். ஒரு நாட்டில் தொழிலாளர்களின் ஆற்றல் உரிய முறையில் பயன்படுத்தப்படுவது அதன் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். அதே வேளையில் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படும்

பொருள் அல்ல. அவர்கள் மனிதர்கள் என்பதால் உற்பத்தியில் தனித்தன்மை வாய்ந்தவர்களாக விளங்குகின்றனர். ஆகவே, தொழிலாளர் கொள்கைகளில் அவர்கள் குறித்து சமுதாய நல்வாழ்வு அளவீடுகள் இருக்க வேண்டும். அவ்வாறின்றி, அதிகார, ஆதிக்க வர்க்கத்தினரால் மனித உழைப்பு உறிஞ்சப்படுகிறது. சுரண்டல்காரர்களால் மனித உழைப்பு பாதிக்கப்படும்போது சமுதாயம் சீர்கேடு அடைகிறது. மனித உழைப்பாற்றலின் மூலதனமாக தொழிலாளர்களின் உழைப்புரிமைகள் பாதுகாக்கப்படுமாயின் அவர்களின் பொருளாதர நல பாதுகாப்பு உரிமைகள் மனிதச் சமுதாய நல பொருளாதார மேம்பாட்டு உரிமைகளாக மாற்றம் பெறுகின்றன (Rajam Krishnan, 2019).

பொருளாதாரம் மற்றும் உழைப்புச் சுரண்டலில் பின் தங்கியுள்ள உழைப்பாளர்கள் தங்கள் உரிமையை மீட்டெடுக்க சிந்திக்கத் தொடங்கினர். துன்பத்தில் அழுந்தி வாழ்வாதாரத்தைத் தொலைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமது தொழிலாளர்களுக்கு விடியல் வரவேண்டும் என்ற ஆதங்கத்தில் வீரபத்திரன் தனது கருத்தை வெளியிடுகிறான்.

“உழைச்சிப் பாடுபடுகிறவனுக்கு நெல்லு விக்கிற விலயச் சொல்ல உரிமையில்ல. எவனோ நிர்ணயஞ் செஞ்சு போடுறான். கட்டுப்படியாவுலன்னா எங்க மேல நீங்க பாயுவீங்க. ஒரம், பூச்சி மருந்து அது இதெல்லாம் பண்ணுற தொழிற்சாலைச் செலவெல்லாம் இந்த மொதலாளிக, அதுந் தலயில வச்சு வெவசாயி தலையில கட்டுறாங்க. கூலி அதிகம் சம்பளம் அதிகம்னு சாமான் வெலய ஏத்துறாங்க. நீங்க என்னமோ அஞ்சு ரூபாய ஏழு ரூபாயாக்கிட்டோம். ஏழ ஒன்பதாக்கிட்டோம்னு பெரிசாச் சொல்லிக்கிறீங்க. ஒரு நாயித்துக்கிழமை உண்டா? சம்பளத்தோட லீவு உண்டா? சீக்காப் படுத்தா ஏன்னு கேக்க நாதி உண்டா? என்ன பத்திரம் பாதுகாப்பு? இன்னும் கடன் வாங்கிட்டு வட்டி குடுக்க முடியாம சாவுறோம்…” எங்களுக்கு “என்னா சொதந்தரங்க இப்பவும் இருக்குது, சோத்துக்கு இல்லாத சொதந்தரம்?” என்று உழைப்புக்குரிய ஊதியம் கிடைக்காத நிலையை விளக்கிக் கூறுகிறான். உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வு மலர வேண்டும் என்ற நோக்கத்தில் தொழிற்சங்கம் அமைக்கத் தொழிலாளர்களிடம் ராமசாமி கேட்கிறான். தொழிலாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும்; பணி நிரந்தரம் வேண்டும் என்ற சிந்தனையைத் தனது கோரிக்கையாகப் பனஞ்சோலை அளத்து முதலாளியிடம் முன் வைக்கிறான் (Rajam Krishnan, 2001).

முதலாளி, தொழிலாளி என்று இருவகையாகப் பிரிந்த நிலையில் முதலாளிகளின் சொகுசு வாழ்வுக்குத் தொழிலாளி பாடுபட வேண்டியதாயிற்று. உழைப்பு விரயமாக்கப்பட்டது. தொழிலாளர்களின் உரிமை பறிக்கப்பட்டது. அவர்களின் பொருளாதார உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் நிர்வாகத்தினரை எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று. வேளாண் தொழிலாளர்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக கொடி பிடித்து போராடிக் கொண்டிருந்த போது தெக்கத்தியிலிருந்து குறைந்த கூலிக்கு வேலை செய்ய நிலக்கிழார்கள் அழைத்து வந்தனர். அவர்களிடம் சம்முகத்தின் தந்தை,

“ஏண்டா எங்க வயித்தில மண்ணள்ளிப் போடுறிய? ஒங்களப்போல ஒழச்சிப் பிழச்சிருக்கம் நாங்க. இப்படித் துரோகம் செய்யலாமான்னு” கேட்டார். தங்களுக்குப் போட்டியாக வேற்று ஊரிலிருந்து வந்த தொழிலாளர்களிடம் எதிர்ப்புத் தெரிவித்தார் (Rajam Krishnan, 2001).

உப்பளத் தொழிலாளர்கள் ஆலைத் தொழிற் சட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும். ஆலைச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களாக ஆக்கப்பட வேண்டும். அத்துடன், “சம கூலி மட்டுமில்லை, பேறுகால வசதி, ஆசுபத்திரி மருத்துவ வசதி, பிள்ளைப்பால், படிக்க வசதி, நல்ல சாப்பாடு, ஓய்வு காலப் பென்சன், குடியிருக்க வசதியான வீடு, சம்பளத்துடன் லீவு, உப்புத்தொழிலால் ஏற்படும் நோய்களுக்குத் தக்க மருத்துவ பாதுகாப்பு வசதி” போன்ற உப்பளத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ராமசாமி எடுத்துரைக்கிறான் (Rajam Krishnan, 2005).

உப்பளம் மற்றும் வேளாண் தொழில்களில் வாழ்வைத் தொடங்கி, கண்ணீரில் நனைந்து, வேதனையுடன் துயரப்பட்டுக் கொண்டிருக்கும் கூலித்தொழிலாளர்கள் வாழ்வு மலர வேண்டும்; பொருளாதாரத்தில் விழிப்புணர்வு பெறவேண்டும் என்ற நோக்கில் இப்புதினங்களைப் படைத்துள்ளார்.

## முடிவுரை

ஏழை, எளிய மக்களின் வாழ்வியல் தரம் உயர வேண்டும். அவர்களின் பொருளாதாரம் மேம்பட வேண்டும்; பெண்களின் வாழ்வு மலர வேண்டும். கல்வித் தரம் உயர வேண்டும். அனைவருக்கும் என்ற சட்டம் பொதுவுடைமை ஆக்கப்பட வேண்டும். மனிதனின் அடிப்படை உரிமைகள் பேணப்பட வேண்டும் என்ற நோக்கில் எழுதி விருது பெற்ற பெண்குரல், சுழலில் மிதக்கும் தீபங்கள், வளைக்கரம், சேற்றில் மனிதர்கள், கரிப்பு மணிகள் போன்ற புதினங்களில் இராஜம் கிருஷ்ணன் விழிப்புணர்வுச் சிந்தனையை விதைத்துள்ளார்.

## References

Raja Muthrulandi, (2021) Manitha urimaikal, New Century Book House, Chennai, India.

Rajam Krishnan, (1968) Valaikaram, Thagam Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (1981) Penn Kural, Thagam Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (1993) Verukku Neer, Thagam Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (2001) Setril Manithargal, Thagam Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (2005) Karippu manikal, Thagam Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (2006) Suzhalil Mithakkum Deepangal, Thagam Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (2019) Kurinji Then, Thagam Pathippagam, Chennai, India.

Santhanam, S., (1994) Kalviyum Samoogamum, Sandha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License